# கந்த குரு கவசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சற்குருசாந்தானந்த சுவாமிகள்

அருளிய

# கந்த குரு கவசம்

சரணப்பத்து,

திருமுருகன் திருப்பதிகம்

அடங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ஸ்கந்த குரு கவசம்

**ராகம் : நாட்டை**

கலியுகத் தெய்வமே கந்தனுக்கு மூத்தோனே
மூஷிக வாகனனே மூலப்பொருளோனே
ஸ்கந்தகுரு கவசத்தை கலிதோஷம் நீங்கிடவே
திருவடியின் திருவருளால் செப்புகிறேன் காத்தருள்வாய்
சித்தி விநாயக ஜயமருள் போற்றுகின்றேன்
சிற்பர கணபதே நற்கதியும் தந்தருள்வாய்
கணபதி தாளிணையைக் கருத்தினில் வைத்திட்டேன்
அச்சம் தீர்த்தென்னை ரஷித்திடுவீரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராகம் : நாட்டை

ஸ்கந்தா சரணம் ஸ்கந்தா சரணம்
சரவணபவ குஹா சரணம் சரணம்
குருகுகா சரணம் குருபரா சரணம்
சரண மடைந்திட்டேன் கந்தா சரணம்

தனைத்தா னறிந்து நான் தன்மயமாகிடவே
ஸ்கந்தகிரி குருநாதா தந்துடுவீர் ஞானமுமே
தத்தகிரி குருநாதா வந்திடுவீர் வந்திடுவீர்
அவதூத ஸத்குருவாய் ஆண்டவனே வந்திடுவீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புருவாய் வந்தென்னை ஆட்கொண்ட குருபரனே
அறம் பொருளின்பம் வீடுமே தந்தருள்வாய்
தந்திடுவாய் வரமதனை ஸ்கந்தகுரு நாதா
சண்முகா சரணம் சரணம் ஸ்கந்த குரோ

காத்திடுவாய் காத்திடுவாய் ஸ்கந்தகுரு நாதா
போற்றிடுவேன் போற்றிடுவேன் புவனகுரு நாதா
போற்றி போற்றி ஸ்கந்தா போற்றி
போற்றி போற்றி முருகா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுமுகா போற்றி அருட்பதம் அருள்வாய்

தகப்பன் சாமியே என் இதயத்துள் தங்கிடுவாய்

ஸ்வாமி மலைதனில் சொன்னதனைச் சொல்லிடுவாய்

**ராகம் : ஸஹானா**

சிவகுரு நாதா செப்பிடுவாய் ப்ரணவமதை

அகக்கண் திறக்க அருள்வாய் உபதேசம்

திக்கெல்லாம் வென்று திருச்செந்தில் அமர்ந்தோனே

ஆறுமுக ஸ்வாமி யுன்னை அருட்சோதியாய் காண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகத்துள்ளேகுமரா நீ அன்புமயமாய் வருவாய்
அமரத் தன்மையினை அனுக்ரஹித் திடுவாயே
வேலுடைக் குமரா நீ வித்தையும் தந்தருள்வாய்
வேல்கொண்டு வந்திடுவாய் காலனை விரட்டிடவே

தேவரைக் காத்த திருச்செந்தி லாண்டவனே
திருமுருகன் பூண்டியிலே திவ்யஜோதி யானகந்தா
பரஞ்ஜோதி யுங்காட்டிப் பரிபூரண மாக்கிடுவாய்
திருமலை முருகாநீ திடஞான மருள் புரிவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லமுத்துக் குமரா மும்மல மகற்றிடுவாய்
அடிமுடி யறியவொணா அண்ணா மலையோனே
அருணாசலக் குமரா , அருணகிரிக் கருளியவா
திருப்பரங் கிரிகுஹனே தீர்த்திடுவாய் வினைமுழுதும்

திருத்தணி வேல் முருகா தீரனாய் ஆக்கிடுவாய்
எட்டுக்குடிக் குமரா ஏவல்பில்லி சூனியத்தை
பகைவர் சூதுவாதுகளை வேல்கொண்டு விரட்டிடுவாய்
எல்லாப் பயன்களும் எனக்குக் கிடைத்திடவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கும் நிறைந்த கந்தா என்கண் முருகாநீ
என்னுள் ளறிவாய் நீ உள்ளொளியாய் வந்தருள்வாய்
திருப்போரூர் மாமுருகா திருவடியே சரணமய்யா
அறிவொளியாய் வந்துநீ அகக்கண்ணைத் திறந்திடுவாய்.

ராகம் :- கல்யாணி

திருச்செந்தூர் ஷண்முகனே ஜகத்குருவிற் கருளியவா
ஜகத்குரோ சிவகுமரா சித்தமல மகற்றிடுவாய்
செங்கோட்டு வேலவனே சிவானு பூதிதாரும்
சிக்கல் சிங்காரா ஜீவனைச்சிவ னாக்கிடுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றக் குடிகுமரா குருகுகனாய் வந்திடப்பா
குமரகிரிப் பெருமானே மனத்தையும் மாய்த்திடுவீர்
பச்சைமலை முருகா இச்சையைக் களைந்திடப்பா
பவழமலை ஆண்டவனே பாவங்களைப் போக்கிடப்பா

விராலிமாலை ஷண்முகனே விரைவில் நீ வந்திடப்பா
வயலூர் குமாரகுரோ ஞானவரமெனக் கருள்வீரே
வெண்ணெய் மலைமுருகா மெய்வீட்டைத் தந்திடுவீர்
கதிர்காம வேலவனே மனமாயை அகற்றிடுவீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்த மலைக்குமரா கருத்துள் வந்திடுவீர்
மயிலத்து முருகாநீ மனத்தகத்துள் வந்திடுவீர்
கஞ்சமலைச் சித்தகுரோ கண்ணொளியாய் வந்திடுவீர்
குமரமலைக் குருநாதா கவலையெல்லாம் போக்கிடுவீர்

வள்ளிமலை வேல்முருகா வேல்கொண்டு வந்திடுவீர்
வடபழனி யாண்டவனே வல்வினைகள் போக்கிடுவீர்
ஏழுமலை யாண்டவனே எத்திக்கும் காத்திடுவீர்
ஏழ்மை யகற்றிகந்தா எமபயம் போக்கிடுவீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசையாத நெஞ்சத்தில் அறிவாக நீ அருள்வாய்
அறுபடைக் குமரா மயிலேறி வந்திடுவாய்
பணிவதே பணியென்று பணித்தனை நீ எனக்கு
பணிந்தேன் கந்தா உன்பாதம் பணிந்துவப்பேன்
அருட்பெருஞ் ஜோதியே அன்பெனக் கருள்வாய்

**ராகம் :- ஆனந்த பைரவி**

படர்ந்த அன்பினைநீ பரப்பிரம்மம் என்றனையே
உலகெங்கு முள்ளது ஒருபொருள் அன்பேதான்
உள்ளுயிராகி இருப்பதும் அன்பென்றாய்
அன்பே குமரன் அன்பே ஸ்கந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பே ஓமெனும் அருள் மந்திரம் என்றாய்
அன்பை உளத்திலே அசையாது அமர்ந்திடுமோர்
சக்தியைத் தந்து தடுத்தாட் கொண்டிடவும்
வருவாய் அன்பனாய் வந்தருள் ஸ்கந்தகுரோ

யாவர்க்கும் இனியன் நீ, யாவர்க்கும் எளியன்நீ
யாவர்க்கும் வலியன் நீ, யாவர்க்கு மானோய் நீ
உனக்கொரு கோயிலைஎன் அகத்துள்ளே புனைவேனே
சிவசக்திக் குமரா சரணம் சரணமையா !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபாயம் தவிர்த்து தடுத்தாட் கொண்டருள்வாய்
நிழல் வெயில் நீர்நெருப்பு மண்காற்று வானதிலும்
பகைமையை அகற்றி அபயமளித் திடுவீர்
உணர்விலே ஒன்றி என்னை நிர்மல மாக்கிடுவாய்

யானென தற்றமெய்ஞ் ஞானம் அருள்வாய்நீ
முக்திக்கு வித்தான முருகா கந்தா !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ராகம் :- கேதார கௌளம்**

சதுர்மறை போற்றும் ஷண்முக நாதா
ஆகமம் ஏத்தும் அம்பிகைப் புதல்வா
ஏழையைக் காக்கநீ வேலேந்தி வந்திடுவாய்
தாயாய்த் தந்தையாய் முருகா தக்கணம் நீ வருவாய்
சக்தியும் சிவனுமாய்ச் சடுதியில் நீ வருவாய்

பரம்பொருளான பாலனே ஸ்கந்தகுரோ
ஆதிமூலமே அருவாய் உருவாய் நீ
அடியனைக் காத்திட அறிவாய்வந் தருள்வாய்
உள்ளொளியாய் முருகா உடனே நீ வா வா வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவாதி தேவா சிவகுரோ வா வா வா
வேலாயுதத்துடன் குமரா விரைவில் நீ வந்திடப்பா
காண்பன யாவுமாய்க் கண்கண்ட தெய்வமாய்
வேதச் சுடரோய் மெய்க்கண்ட தெய்வமாய்

மித்தையாம் இவ்வுலகை மித்தையென் றறிந்திடச்செய்
அபயம் அபயம் கந்தா அபயமென்றலறுகிறேன்
அமைதியை வேண்டி அறுமுகவா வாவென்றேன்
உன்துணை வேண்டினேன் உமையவள் குமரா கேள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சம் அகற்றிடுவாய் அமைதியைத் தந்திடுவாய்
வேண்டிய துன்னருளே அருள்வதுன் கடனேயாம்
உன் அருளாலே உன்தாள் வணங்கிட்டேன்
அட்டமா சித்திகளை அடியனுக் கருளிடப்பா

அஜபை வழியிலே அசையாம லிருத்திவிடு
சித்தர்கள் போற்றிடும் ஞானசித்தியும் தந்துவிடு
சிவானந்தத் தேனில் திளைத்திடவே செய்துவிடு
அருள்ஒளிக் காட்சியை அகத்துளே காட்டிவிடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவை அறிந்திடும் அவ்வருளையும் நீ தந்துவிடு
அனுக்ரஹித் திடுவாய் ஆதிகுரு நாதாகேள்
ஸ்கந்த குருநாதா ஸ்கந்த குருநாதா !
தத்துவம் மறந்து தன்னையும் நான்மறந்து

நல்லதும் கெட்டதும் நானென்பதும் மறந்து
பாவபுண் ணியத்தோடு பரலோகம் மறந்திடச்செய்
அருள்வெளி விட்டிவனை அகலா திருத்திடுவாய்
அடிமையைக் காத்திடுவாய் ஆறுமுகக் கந்தகுரோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தியிலே பெரிய ஞானசித்தி நீ அருள
சீக்கிரமே வருவாய் சிவானந்தம் தருவாய்
சிவானந்தம் தந்தருளிச் சிவசித்த ராக்கிடுவாய்
சிவனைப் போலென்னைச் செய்வ துன்கடனே
சிவசத் குருநாதா சிவசத் குருநாதா !

**ராகம் :- ஷண்முகப்பிரியா**

ஸ்கந்த குருநாதா கதறுகிறேன் கேட்டிடுவாய்
தாளிணைப் பிடித்தேன் தந்திடு வரமெனக்கு
திருவருட் சக்தியை தந்தாட் கொண்டிடுவாய்
சத்ரு பகைவர்களை ஷண்முகா ஒழித்திட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்குத் திசையிலிருந்து க்ருபாகரா காப்பாற்றும்
தென் கிழக்குத் திசையிலிருந்து தீனபந்தோ காப்பாற்றும்
தென் திசை யிலுமென்னைத் திருவருளால் காப்பாற்றும்
தென்மேற் கிலுமென்னை திறல்வேலால் காப்பாற்றும்

மேற்குத் திக்கிலென்னை மால்மருகா ரஷிப்பாய்
வடமேற்கிலுமென்னை மயிலோனே ரஷிப்பாய்
வடக்கிலென்னைக் காப்பாற்ற வந்திடுவீர் சத்குருவாய்
வடகிழக்கில் எனக்காக மயில்மீது வருவீரே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராகம் :- பீம்பிளாஸ்

பத்துதிக்குத் தோறுமெனைப் பறந்துவந்து ரஷிப்பாய்
எண் திசையையும், சிரசினையும் சிவகுரோ ரஷிப்பாய்
நெற்றியும் புருவமும் நினதருள் காக்கட்டும்
புருவங்களுக் கிடையே புருஷோத்தமன் காக்கட்டும்

கண்க ளிரண்டையும் கந்தவேல் காக்கட்டும்
நாசிக ளிரண்டையும் நல்லவேல் காக்கட்டும்
செவிக ளிரண்டையும் சேவற்கொடி காக்கட்டும்
கன்னங்க ளிரண்டையும் காங்கேயன் காக்கட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதட்டி னையும்தான் உமாசுதன் காக்கட்டும்
நாக்கை நம்முருகன் நயமுடன் காக்கட்டும்
பற்களைக் கந்தன் பலம்கொண்டு காக்கட்டும்
கழுத்தை ஸ்கந்தன் கைகளால் காக்கட்டும்

தோள்க ளிரண்டையும் தூயவேல் காக்கட்டும்
கைகள் விரல்களைக் கார்த்திகேயன் காக்கட்டும்
மார்பையும் வயிற்றையும் வள்ளிமணாளன் காக்கட்டும்
மனத்தை முருகன்கை மாத்தடிதான் காக்கட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹ்ருதயத்தில் ஸ்கந்தன் இனிதுநிலைத் திருக்கட்டும்
உதரத்தை யெல்லாம் உமை மைந்தன் காக்கட்டும்
நாபிகுஹ்யம் லிங்கம் நவையுடைக் குதத்தோடு
இடுப்பை, முழங்காலை இணையான கால்களையும்

புறங்கால் விரல்களையும் பொருந்தும் உகிர் அனைத்தையுமே
உரோமத்து வாரமெல்லாம் உமைபாலா ரஷிப்பாய்
தோல்ரத்தம் மஜ்ஜையையும் மாம்ஸமென்பு மேதஸையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ராகம் :- மோஹனம்**

அறுமுகவா காத்திடுவீர் அமரர்தலைவா காத்திடுவீர்
என் அஹங்காரமுகமகற்றி அறிவொளியாயிருந்தும்
முருகா வெனைக்காக்க வேல் கொண்டு வந்திடுவீர்
பாபத்தைப் பொசுக்கிப் பாரெல்லாம் சிறப்புறவே

ஓம் ஸெளம் சரவணபவ ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் என்றும்
க்லெளம் ஸெளம் நமஹவென்று சேர்த்திட்ட நாள்தோறும்
ஓமிருந்து நமஹவரை ஒன்றாகச் சேர்த்திட்டா
ஒன்றாகக் கூட்டியுமே உள்ளத்திலே இருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமனத் தோடுநீ உருவையும் ஏத்திடடா
முருகனின் மூலமிது முழுமனத்தோ டேத்திட்டால்
மும்மல மகன்றுவிடும் முக்தியுந்தன் கையிலுண்டாம்
முக்தியை வேண்டியுமே எத்திக்கும் செல்லவேண்டாம்

முருகன் இருப்பிடமே முக்தித்தல மாகுமப்பா
ஹ்ருதயத்தில் முருகனை இருத்திவிடு இக்கணமே
இக்கணமே மூலமந்திரம் ஏத்திவிடு ஏத்திவிடு
மூலமதை ஏத்துவோர்க்குக் காலபய மில்லையடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலனை நீஜயிக்கக் கந்தனைப் பற்றிடடா
சொன்னபடிச் செய்தால் சுப்ரமண்ய குருநாதன்
தன்னொளிப் பெருஞ்சுடராய் உன்னுள்ளே தானிருப்பான்
ஜகமாயை ஜயித்திடவே செப்பினேன் மூலமுமே

மூலத்தை நீஜபித்தே முக்தனு மாகிடடா
அசஷர லக்ஷ்மிதை அன்புடன் ஜபித்துவிடில்
எண்ணிய தெலாம்கிட்டும் எமபய மகன்றோடும்
மூவுலகும் பூஜிக்கும் முருகனருள் முன்னிற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவுலகில் இணையற்ற பூஜ்யனு மாவாய் நீ
கோடித்தரம் ஜபித்துக் கோடிகாண வேண்டுமப்பா
கோடிகாணச் சொன்னதைநீ நாடிடுவாய் மனமே
ஜன்மம் கடைத்தேற ஜபித்திடுவாய் கோடியுமே

வேதாந்த ரகசியமும் வெளியாகு முன்னுள்ளே
வேத சூக்குமத்தைவிரைவாகப் பற்றிடலாம்
சுப்ரம் மண்யகுரு ஜோதியாயுள் தோன்றிடுவான்
அருட்பெருஞ் ஜோதியான ஆறுமுக ஸ்வாமியுமே
அந்தர் முகமிருந்து ஆட்கொள்வான் சத்தியமாய்
சித்தியையும் முக்தியையும் ஸ்கந்தகுரு தந்திடுவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராகம் :- அடாணா

நின்னையே நான்வேண்டி நித்தமும் ஏத்துகிறேன்
மெய்யறிவாகக் கந்தா தந்திடுவாய் இவனுளேநீ
வந்திடுவாய் மருவிடுவாய் படித்தறி வாகவேநீ
பகுத்தறி வோடிவனைப் பார்த்திடச் செய்திடப்பா

பகுத்தறி வானகந்தன் பரங்குன்றில் இருக்கின்றாய்
பழனியில் நீயும் பழம்ஜோதி யானாய்நீ
பிரமனுக் கருளியவா பிரணவப் பொருளோனே
பிறவா வரமருளி பிரம்மமய மாக்கிடுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்செந் தூரில்நீ சக்திவேல் தாங்கிவிட்டாய்
பழமுதிர்சோலையில் பரஞ்சோதி மயமானாய்
சுவாமி மலையிலே சிவசுவாமிக் கருளியக்
குன்றுகள் தோறும் குருமாய் அமர்ந்திட்டோய்

ஸ்கந்த கிரியைநீ சொந்தமாக்கிக் கொண்டனையே
ஸ்கந்த குருநாதா ஸ்கந்தாச்ரம ஜோதியை
பிறப்பையும் இறப்பையும் பெயர்த்துக் காத்திடுவாய்
பிறவாமை என்கிற பெருவரம்நீ தந்திடுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவக் குப்பையை மறந்திடச் செய்திடுவாய்
எந்த நினைப்பையும் எரித்துநீ காத்திடுவாய்
ஸ்கந்தா சரணம் ஸ்கந்தா சரணம்
சரண மடைந்திட்டேன் சடுதியில் வாருமே

சரவண பவனே சரவண பவனே
உன்னரு ளாலேநான் உயிரோடிருக்கின்றேன்
உயிருக்குயிரானகந்தா உன்னி லென்னைக் கரைத்திடப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகம் :- ஸிம்மேந்திர மத்யமம்

என்னி லுன்னைக்காண எனக்கு வரமருள்வாய்
சீக்கிரம் வந்து சிவசக்தியும் தந்தருள்வாய்
இடகலை பிங்கலை ஏதும் அறிந்திலேன் நான்
இந்திரிய மடக்கி இருந்து மறிகிலேன்நான்

ஸ்கந்தாஉன் திருவடியைப் பற்றினேன் சிக்கெனவே
சிக்கெனப் பற்றினேன் செப்பிடுவீர் உபதேசம்
காமக் கசடுகள் யாவையும் களைந்திடுவாய்
சித்த சுத்தியும் ஜபமும் தந்திடுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைப்பெல்லாம் நின்னையே நினைத்திடச் செய்திடுவாய்
திருமுருகா வுன்னைத் திட முற நினைத்திடவே
திருவருள் தந்திடுவாய் திருவருள் தான் பொங்கிடவே
திருவருள் ஒன்றிலே நிலை பெறச் செய்திடுவாய்

நிலைபெறச் செய்திடுவாய் நித்யானந்தமதில்
நித்யா னந்தமே நின்னுரு வாகையினால்
அத்வை தானந்தத்தில் இமைப்பொழுது ஆழ்ந்திடுவாய்
ஞான பண்டிதா நான்மறை வித்தகா கேள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்கந்த குருநாதா ஸ்கந்த குரு நாதா கேள்
மெய்பொருள் காட்டி மேன்மை அடைந்திடச்செய்
வினைகள் யாவையுமே வேல்கொண்டு விரட்டிடுவாய்
தாரித் திரியங்களையுன் தடிகொண்டு விரட்டிடுவாய்

துக்கங்க ளனைத்தையும் தொலைதூரம் போக்கிடுவாய்
பாப உடலைப் பரிசுத்த மாக்கிடுவாய்
இன்ப துன்பத்தை இருவிழியால் விரட்டிடுவாய்
ஆசைப் பேய்களை அறவே நசுக்கிடுவாய்
அகந்தைப் பிசாசை அழித்து ஒழித்திடடா
மெய்யருளாம் உன்னருளில் முருகா இருத்திடுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகம் :- தன்யாஸி

கண்கண்ட தெய்வமே கலியுக வரதனே
ஆறுமுக மானகுரோ அறிந்திட்டே னுன்மஹிமை
இக்கணமே வருவாய் என் ஸ்கந்த குருவே நீ
என்னைக் காத்திடவே எனக்குநீ அருளிடவே
அரைக் கணத்தில் நீயும் ஆடிவரு வாயப்பா

வந்தெனைத் தடுத்து வலிய ஆட்கொள் வரதகுரோ
அன்புத் தெய்வமே ஆறுமுக மானவனே
சுப்ரம் மண்யனே சோகம் அகற்றிடுவாய்
ஞான ஸ்கந்தரே ஞானம் அருள்வாய்நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞான தண்டபாணியே என்னை ஞானபண்டித னாக்கிடுவாய்
அகந்தையெலா மழித்து அன்பினை ஊட்டிடுவாய்
அன்பு மயமாக்கி ஆட்கொள்ளு வாயப்பா
அன்பை என் உள்ளத்தில் அசைவின்றி நிறுத்திவிடு

அன்பையே கண்ணாக ஆக்கிக் காத்திடுவாய்
உள்ளும் புறமும் உன்னருளாம் அன்பையே
உறுதியாக நானும் பற்றிட உவந்திடுவாய்
எல்லையில்லாத அன்பே இறைவெளி என்றாய்நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கிங் கெனாதபடி எங்கும் அன்பென்றாய்
அன்பே சிவமும் அன்பே சக்தியும்
அன்பே ஹரியும் அன்பே பிரமனும்
அன்பே தேவரும் அன்பே மனிதரும்

அன்பே நீயும் அன்பே நானும்
அன்பே சத்தியம் அன்பே நித்தியம்
அன்பே சாந்தம் அன்பே ஆனந்தம்
அன்பே மௌனம் அன்பே மோஷம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பே பிரமமும் அன்பே அனைத்துமென்றாய்
அன்பில்லாத இடம் அங்குமிங்கு மில்லையென்றாய்
எங்கும் நிறைந்த அன்பே என் குருநாதனப்பா
அன்பில் உறையும் அருட்குரு நாதரே தான்

ஸகந்தாச்ர மத்தில் ஸ்கந்தகுரு வானான்காண்
மூவரும் தேவரும் முனிவரும் போற்றிடவே
ஸகந்தாச்ர மத்தில் ஸ்கந்த குரு வானான்காண்
மூவரும் தேவரும் முனிவரும் போற்றிடவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்கந்தாச் ரமந்தன்னில் ஸ்கந்த ஜோதியுமாய்
ஆத்ம ஜோதியுமாய் அமர்ந்திட்ட ஸ்கந்த குரு
இருளை அகற்றவே எழுந்திட்ட எங்கள் குரு
எல்லை யில்லாதஉன் இறைவெளியைக் காட்டிடுவாய்

முக்தியைத் தந்திடுவாய் மூவரும் போற்றிடவே
நம்பினேன் உன்னையே நம்பினேன் ஸ்கந்தகுரோ
உனையன்றி இவ்வுலகில் என்றுமில்லை என்றுணர்ந்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ராகம் :- காம்போதி**

நன்கறிந்து கொண்டேன் நானும் உனதருளால்
விட்டிட மாட்டேன் கந்தா வீடதருள்வீரே
நடுநெற்றித் தானத்து நானுனைத் தியானிப்பேன்
பிரம மந்திரத்தைப் போதித்து வந்திடுவாய்
சுழுமுனை மார்க்கமாய் ஜோதியைக் காட்டிடுவாய்
சிவயோகி யாகஎனைச் செய்திடும் குருநாதா
ஆசை அறுத்து அரனடியைக் காட்டிவிடும்
மெய்யடிய ராக்கி மெய்வீட்டில் இருத்திவிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொங்கு நாட்டிலே கோயில்கொண்ட ஸ்கந்தகுரோ
கொல்லிமலை மேலே குமரகுரு வானவனே
கஞ்சமலை சித்தர்போற்றும் ஸ்கந்தகிரி குருநாதா
கருவூரார் போற்றும் காங்கேயா ஸ்கந்தகுரோ

மருதமலைச் சித்தன் மகிழ்ந்துபணி பரமகுரோ
சென்னி மலைக்குமரா சித்தர்க் கருள்வோனே
சிவவாக்கிய சித்தருனைச் சிவன்மலையில் போற்றுவரே
பழனியில் போகருமே பாரோர்வாழப் பிரதிஷ்டித்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலிப்பாணி சித்தர்களால் புடை சூழ்ந்த குமரகுரோ
கொங்கில் மலிந்திட்ட ஸ்கந்த குருநாதா
கள்ளம் கபடமற்ற வெள்ளையுள்ளம் அருள்வீரே
கற்றவர்க ளோடென்னைக் களிப்புறச் செய்திடுமே
உலகெங்கும் நிறைந்திருந்தும் கந்தகுரு உள்ள இடம்
ஸ்கந்தகிரி என்பதைநான் கண்டு கொண்டேன் கண்டு கொண்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ராகம் :- ஹம்ஸானந்தி**

நால்வர் அருணகிரி நவமிரண்டு சித்தர்களும்
பக்தர்களும் போற்றும் பழனிமைல முருகா கேள்
கொங்குதேசத்திலே குன்றுதோறும் குடிகொண்டோய்
சீலம் நிறைந்த சேலம்மா நகரத்தில்
கன்னிமார் ஓடையின்மேல் ஸ்கந்தகிரி அதனில்
ஸ்கந்தாச் ரமத்தினிலே ஞானஸ்கந்த சத்குருவாய்
அமர்ந்திருக்கும் ஜோதியே ஆதிமூல மானகுரோ
அயர்ச்சியை நீக்கிடுவாய்என் தளர்ச்சியை அகற்றிடுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகவனே சன்மகனே சுப்ரமண்ய ஜோதியே
பேரின்ப மகிழ்ச்சியையும் பெருகிடச் செய்திடப்பா
பரமா னந்தமதில் எனைமறக்கப் பாலிப்பாய்
மால் முருகா வள்ளிமணவாளா ஸ்கந்தகுரோ

சிவகுமாரா உன்கோயில் ஸ்கந்தகிரி என்றுணர்ந்தேன்
ஜோதிப் பிழம்பான சுந்தரனே பழனியப்பா
சிவஞானப் பழமான ஸ்கந்த குருநாதா
பழம்நீ என்றதினால் பழனிமலை யிருந்தாயோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவா வினன்குடியில் திருமுருகனானாயோ
குமரா முருகா குருகுகா வேலவனே
அகத்தியர்க் குத்தந்து ஆட்கொண்டாய் தமிழகத்தை
கலியுக வரதனென்று கலசமுனி உனைப்புகழ்ந்தான்

ஔவைக்கு அருள் செய்த அருமுருகா ஸ்கந்தகுரோ
ஒழுக்கமொடு கருணையையும் தவத்தையும் தந்தருள்வாய்
போகருக் கருள் செய்த புவன சுந்தரனே
தண்டபாணித் தெய்வமே தடுத்தாட் கொண்டிடப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டிக் கோலத்தில் அணைத்திடுவாய் தண்டுடனே
தெய்வங்கள் போற்றிடும் தண்டாயுத ஜோதியே
ஸ்கந்தகிரி மேலே ஸ்கந்தகிரிஜோதி யானவனே
கடைக்கண்ணால் பார்த்திடப்பா கருணை யுள்ளஸ்கந்தகுரோ

**ராகம் :- பிலஹரி**

ஏழையைக் காத்திடப்பா ஏத்துகிறேன் உன்நாமம்
உன்னையன்றி வேறொன்றை ஒரு போதும் நம்புகிலேன்
கண்கண்ட தெய்வமே கலியுக வரதனே
கந்தனென்ற பேர்சொன்னால் கடிதாக நோய்தீரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவனேச்வரி மைந்தா போற்றினேன் திருவடியை
திருவடியை நம்பினேன் திருவடி சாஷியாக
புவனமாதா மைந்தனே புண்ணிய மூர்த்தியேகேள்
நின் நாமம் ஏத்துவதே நான்செய்யும் தவமாகும்.

நாத்தழும் பேறவே ஏத்திடுவேன் நின்நாமம்
முருகா முருகாவென்றேமூச் செல்லாம் விட்டிடுவேன்
உள்ளும் புறமும் ஒருமுருகனையே காண்பேன்
அங்கிங் கெனாதபடி எங்குமே முருகனப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் இலாவிட்டால் மூவுலக மேதப்பா
அப்பப்பா முருகாநின் அருளே உலகமப்பா
அருளெலாம் முருகனின் அன்பெல்லாம் முருகன்
ஸ்தாவர ஜங்கமாய் ஸ்கந்தனாய் அருவுருவாய்

முருகனாய் முதல்வனாய் ஆனவன் ஸ்கந்தகுரு
ஸ்கந்தாச் ரமமிருக்கும் ஸ்கந்தகுரு அடிபற்றிச்
சரணம் அடைந்தவர்கள் ஸாயுஜ்யம் பெற்றிடுவர்
சத்தியம் சொல்கின்றேன் சந்தேக மில்லை யப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதங்கள் போற்றிடும் வடிவேலன் முருகனைநீ
சந்தேக மில்லாமல் சத்தியமாய் நம்பிடுவாய்
சத்திய மானதெய்வம் ஸ்கந்த குருநாதன்
சத்தியம் காணவே நீ சத்தியமாய் நம்பிடப்பா

**ராகம் :- சுப பந்து வராளி**

சத்தியம் வேறல்ல ஸ்கந்தகுரு வேறல்ல
ஸ்கந்தகுருவே ஸத்தியம் ஸத்தியமே ஸ்கந்தகுரு
சத்தியமாயச் சொன்னதைச் சத்தியமாய் நம்பியே
சத்தியமாய் ஞானமாய் சதானந்த மாகிவிடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிவற்ற ப்ரம்மமாய் ஆக்கிடுவான் முருகன்
திருமறைகள் திருமுறைகள் செப்புவதும் இதுவேதான்
ஸ்கந்தகுரு கவசமதைச் சொந்தமாக்கிக் கொண்டுநீ
பொருளுணர்ந்து ஏத்திடப்பா பொல்லாப்பு வினையகலும்

பிறவிப் பிணியகலும் ப்ரம்மா னந்தமுண்டு
இம்மையிலும் மறுமையிலும் இமையோருன்னை போற்றிடுவர்
மூவருமே முன்னிற்பர் யாவருமே பூஜிப்பர்
அனுதினமும் கவசத்தை அன்புடன் ஜபித்திடப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரத்தா பக்தியுடன் சிந்தையொன்றிச் செப்பிடப்பா
கவலைய கன்றிடுமே கந்தனருள் பொங்கிடுமே
பிறப்பும் இறப்பும் பிணிகளும் தொலைந்திடுமே
கந்தன் கவசமே கவசமென்று உணர்ந்திடுவாய்

கவசம் ஏத்துவீரேல் கலியை ஜயித்திடலாம்
கலியென்ற அரக்கனைக் கவசம் விரட்டிடுமே
சொன்னபடிச் செய்து சுகமடைவாய் மனமேநீ
ஸ்கந்தகுரு கவசத்தை கருத்தொன்றி ஏத்துவோர்க்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்டைச் வர்யந்தரும் அந்தமில்லா இன்பந்தரும்
ஆல்போல் தழைத்திடுவன் அறுகுபோல் வேறோடிடுவன்
வாழையடி வாழையைப் போல் வம்சத்தைப் பெற்றிடுவன்
பதினாறும் பெற்று பல்லாண்டு வாழ்ந்திடுவன்
சாந்தியும் சௌக்கியமும் ஸர்வமங்களமும் பெருகிடுமே.

**ராகம் :- கானடா**

ஸ்கந்தகுரு கவசமிதைக் கருத்திருத்தி ஏற்றுவீரேல்
கர்வம் காமக்ரோதம் கலிதோஷ மகற்றுவிக்கும்
முன்செய்த வினையகன்று முருகனருள் கிட்டிவிடும்
அறம்பொருள் இன்பம்வீடு அதிசுலப மாய்க்கிட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசாரம் சீலமுடன் ஆதிநேம நிஷ்டையுடன்
கள்ளமில்லா வுளத்தோடு ஸ்கந்தகுரு கவசந்தனை
சிரத்தா பக்தியுடன் சிவகுமர னைநினைத்துப்
பாராயணம் செய்வீரேல் பார்க்கலாம் கந்தனையும்

கந்தகுரு கவசமிதை மண்டலம் நிஷ்டையுடன்
பகலிரவு பாராமல் ஒருமனதாய்ப் பகருவீரேல்
திருமுருகன் வேல்கொண்டு திக்குகள் தோறும்நின்று
காத்திடுவான் கந்தகுரு கவலையில்லை நிச்சயமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞான ஸ்கந்தனின் திருவடியை நம்பியே நீ
கந்தகுரு கவசந்தனை ஓதுவதே தவமெனவே
உணர்ந்துகொண்டு ஓதுவையேல் உனக்குப்பெரிதான
இகபர சுகமுண்டாம் என்னாளும் துன்பமில்லை

துன்பம் அகன்றுவிடும் தொந்தரவு நீங்கிவிடும்
இன்பம் பெருகிவிடும் இஷ்டசித்தி கூடிவிடும்
பிறவிப் பிணியகற்றி ப்ரம்மநிஷ்டை யும்தந்து
காத்து ரஷிக்கும் ஸ்கந்தகுரு கவசமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகம் :- காபி

கவலையை விட்டு நீ ஸ்கந்தகுரு கவசமிதை
இருந்த படியிருந்து ஏத்திவிடு ஏத்தினால்
தெய்வங்கள் தேவர்கள் சித்தர்கள் பக்தர்கள்
போற்றிடுவீர், ஏவலுமே புரிந்திடுவர் நிச்சயமாய்

ஸ்கந்தகுரு கவசம் சம்சயப்பேயோட்டும்
அஞ்ஞானமு மகற்றி அருள்ஒளியும் காட்டும்
ஞான ஸ்கந்தகுரு நானென்று முன்நிற்பன்
உள்ளொளியாயிருந்து உன்னிலவ னாகிடுவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ராகம் :- மத்யமாவதி**

என்னில் உனைக்காட்டி உன்னில் தனைக்காட்டி
எங்கும் தனைக்காட்டி எங்குமுனைக் காட்டிடுவன்
ஸ்கந்தஜோதி யானகந்தன் கந்தகிரி யிருந்து
தண்டாயுதம் தாங்கித் தருகிறான் காட்சியுமே

கந்தகிரி வந்துநிதம் கண்டுய்மின் ஜகத்தீரே
கலிதோஷ மகற்றுவிக்கும் ஸ்கந்தகுரு கவசமிதை
பாராயணம் செய்து பாரில் புகழ்பெறுமின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ராகம் :- மத்யமாவதி**

ஸ்கந்தகுரு கவசபலன் பற்றறுத்துப் பரம்கொடுக்கும்
ஒருதரம் கவசமோதின் உள்ளழுக்குப் போகும்
இருதரம் ஏத்துவீரேல் எண்ணியதெலாம் கிட்டும்
மூன்றுதர மோதின் முன்னிற்பன் ஸ்கந்தகுரு

நான் முறை யோதி தினம் நல்லவரம் பெறுவீர்
ஐந்து முறை தினமோதி பஞ்சாக்ஷரம் பெற்று
ஆறுமுறையோதி ஆறுதலைப் பெற்றிடுவீர்
ஏழுமுறை ஏத்தின் அட்டமா ஸித்திகிட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பது தரமோதின் மரண பயமொழியும்
பத்துதர மோதிநித்தம் பற்றறுத்து வாழ்வீரே
கன்னிமார் ஓடையிலே நீராடி நீறுபூசிக்
கந்தகுரு கவசமோதிக் கந்தகிரி ஏறிவிட்டால்

முந்தை வினையெலாம் கந்தன் அகற்றிவிடுவான்
நிந்தைகள் நீங்கிவிடும் நிஷ்டையுமே கைகூடும்
கன்னிமார் ஓடைநீரைக் கைகளிலே நீ எடுத்துக்
கந்தனென்ற மந்திரத்தை கண்மூடி யுருவேற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உச்சியிலும் தெளித்து உட்கொண்டு விட்டால்உன்
சித்த மலம்ஒடுக்கும், சித்தசுத்தியும் கொடுக்கும்
கன்னிமார் தேவிகளைக் கன்னிமார் ஓடையிலே
கண்டு வழிபட்டுக் கந்தகிரி யேறிடுவீர்

கந்தகிரி யேறிஞான ஸ்கந்தகுரு கவசமிதைப்
பாராயணம் செய்துலகில் பாக்யமெலாம் பெற்றிடுவீர் !
( மும்மலம் அகலும் , முக்தி வரும் , காலபயமில்லை , பாக்கியம் கிட்டும் )

**ஸ்ரீ ஸ்கந்தகுரு கவசம் நிறைவுற்றது .**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முருகா சரணம் சரணம் முருகா

### [ சரணப்பத்து ]

1. அருளாரமுதே சரணம் சரணம்
அழகா அமலா சரணம் சரணம்
பொருளா வெனையாள் புனிதா சரணம்
பொன்னே மணியே சரணம் சரணம்
மருள்வார்க் கரியாய் சரணம் சரணம்
மயில்வாகனனே சரணம் சரணம்
கருணாலயனே சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பண்ணோர் மறையின் பயனே சரணம்
பதியே பரம சரணம் சரணம்
விண்ணே ரொளியே வெளியே சரணம்
வெயிலின் விளையே சரணம் சரணம்
உண்ணே ருயிரே யுணர்வே சரணம்
உருவே யருவே உறவே சரணம்
கண்ணே மணியே சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. முடியா முதலே சரணம் சரணம்
முருகா குமரா சரணம் சரணம்
வடிவே லரசே சரணம் சரணம்
மயிலூர் மணியே சரணம் சரணம்
அடியார்க் கெளியாய் சரணம் சரணம்
அரியாய் பெரியாய் சரணம் சரணம்
கடியார்க் கதியே சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பூவே மணமே சரணம் சரணம்
பொருளே யருளே சரணம் சரணம்
கோவே குகனே சரணம் சரணம்
குருவே திருவே சரணம் சரணம்
தேவே தெளிவே சரணம் சரணம்
சிவ சண்முகனே சரணம் சரணம்
காவே தருவே சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. நடவுந் தனிமா மயிலோய் சரணம்
நல்லோர் புகழும் வல்லாய் சரணம்
திடமுந் திருவுந் தயவோய் சரணம்
தேவர்க் கரியாய் சரணம் சரணம்
தடவண் புயனே சரணம் சரணம்
தனிமா முதலே சரணம் சரணம்
கடவுண் மணியே சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. கோலக் குறமான் கணவா சரணம்
குலமா மணியே சரணம் சரணம்
சீலத் தவருக் கருள்வோய் சரணம்
சிவனார் புதல்வா சரணம் சரணம்
ஞானத்துயர்தீர் நலனே சரணம்
நடுவாகிய நல்லொளியே சரணம்
காலற்றெறுவோய் கினியாய் சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. நங்கட் கினியாய் சரணம் சரணம்
நந்தா வுயர்சம் பந்தா சரணம்
திங்கட் சடையோன் மகனே சரணம்
சிவை தந்தருளும் புதல்வா சரணம்
துங்கச் சுகநன்றருள்வோய் சரணம்
சுரர் வாழ்ந்திருநந்துரையே சரணம்
கங்கைக் கொருமா மதலாய் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. ஒளிருள் ளொளியே சரணம் சரணம்
ஒன்றே பலவே சரணம் சரணம்
தெளியுந் தெருளே சரணம் சரணம்
சிவமே தவமே சரணம் சரணம்
அளியுங் கனியே சரணம் சரணம்
அமுதே யறிவே சரணம் சரணம்
களியொன் றருள்வாய் சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. மன்னே யெனையாள் வரதா சரணம்
மதியே அடியேன் வாழ்வே சரணம்
பொன்னே புனிதா சரணம் சரணம்
புகழ்வாரியதயம் புகுவாய் சரணம்
அன்னே வடிவே லரசே சரணம்
அறுமா முகனே சரணம் சரணம்
கன்னேர் புயனே சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. வேதப் பொருளே சரணம் சரணம்
விண்ணோர் பெருமாள் சரணம் சரணம்
போதத் திறனே சரணம் சரணம்
புனைமா மயிலாய் சரணம் சரணம்
நாதத் தொலியே சரணம் சரணம்
நவையில் லவனே சரணம் சரணம்
காதுக் கினிதாம் புகழோய் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம்

**(கந்தனைச் சரணடைவோர் கவலைகளைப் போக்கவல்லார்)**

**முருகா சரணம் சரணம் முருகா என்னும் சரணப் பத்து நிறைவுற்றது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏறுமயிலேறி

ஏறும் மயிலேறி விளையாடும் முகம் ஒன்றே
ஈசனுடன் ஞான மொழி பேசும் முகம் ஒன்றே
கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் முகம் ஒன்றே
குன்று (உ)ருவாய் வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே
ஆறுமுகமான பொருள் நீ அருள வேண்டும்
ஆதி அருணாச்சலம் அமர்ந்த பெருமானே(ளே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குமரன் திருப்பதிகம்

முருகன் குமரன் குகனென் றுமொழிந்
துருகும் மனமே உவமை பெறுமே
கருணை பொழியும் கதிர்வே லவனை
ஒருநா ளுமறந் தொழியே னுழலேன்! 1

கந்தா குமரா கதிர் வேலவனே
மைந்தா முருகா மறை நாயகனே!
சிந்தா குலம் தீர்த்தே யருள்வாய்
வந்தாள் எனையே வரமும் தருவாய்! 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தா சரணம் கதிர்வேல் சரணம்
சிந்தா மணியே சரணம் சரணம்
முருகா சரணம் முகுந்தன் மருகா
மூவா முதல்வா சரணம் சரணம்! 3

மூஷிக வாஹனன் தம்பி சரணம்
வேத முதல்வா சரணம் சரணம்
விண்ணோர் வணங்கும் வேடுவ சரணம்
விருத்தனே சரணம் விருக்கனே சரணம்! 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரவண பவனே சரணம் சரணம்
ஹரவர ஸுதனே சரணம் சரணம்
சதுரா ஷண்முகா சரணம் சரணம்
வரதா வளம்தாள் சரணம் சரணம் ! 5

சேவற் கொடியோன் சீக்கிரம் வருக
பாவம் பிணியும் போக்கிட வருக
கூவிய ழைக்கும் கூக்குரல் கேட்டு
வாவா வேலா வந்தே காக்க ! 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரனைத் துணித்த சுந்தரா வருகா
வீரக்குமரா வள்ளி மணாளா
பாரில் உள்ளோர் வல்வினை போக்கிச்
சீராய் அருளே செந்தில் முருகா ! 7

கந்தா சரணம் கடம்பா சரணம்
கார்த்திகை பாலா குருவே சரணம்
காராய்க் கலைமகள் நாவினில் நாளும்
சீராய் இருத்திடச் செய்திட வருக ! 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதவக் கண்ணன் மாயோன் மருகா
வள்ளி மணாளா வளமை தருக
வாழ்வை தந்திடு வறுமை நீக்கிடு
வணங்கும் எம்மோர் வழியே நின்றிடு ! (வந்திடு ) 9

குருவே போற்றி குமரா போற்றி
திருவே போற்றி செல்வா போற்றி
சிவனின் மைந்தா ஷண்முகா போற்றி
பரனே போற்றிப் பார்வதி பாலா ! 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுமுகத் தரசே அண்ணலே போற்றி
அழகுக் குமரன் அடியே போற்றி
இனியன் அழகன் இணையடி போற்றின்
இனிதே வருவான் ! இதமே தருவான் !! 11

**( பாவமும் பிணியும் நீக்கி , கல்வியும் , செல்வமும் வாழ்வும் , வளமும் எல்லாம் தரவல்ல )**

**திருக்குமரன் திருப்பதிகம் நிறைவுற்றது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பிரதியை அஞ்சலில் பெற விரும்புவர்கள் சுய விலாசமிடப்பட்ட இருபது ரூபாய் (ரூபாய் 20/=) முத்திரை ஒட்டிய கடித உறை (அளவு 8"X 6") V&T Education Centre க்கு அனுப்பி வைக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெளியீட்டுக் குறிப்பு**

இக் கவசம்

திருக்கோணமலை மருத்துவமனை வீதி

இல.17Aல் அமைந்துள்ள

V.&.T. EDUCATION CENTRE இனால்

திருக்கோணமலை

திருஞான சம்பந்தர் வீதி இல.43ல்

அமைந்துள்ள

ASTRA PRINTERS (PVT)LTD ல்

அச்சிட்டு

திருக்கோணமலை

திரு வில்லூன்றி கந்தசுவாமி கோவில்

2012 ம் ஆண்டு வருடாந்த

துவஜ ஆரோகண (கொடியேற்றம்) தினத்தன்று

( 02.08.2012) திரு முருக பக்தர்கட்கு

அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org